



admin@dhinakani.com

நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

காலை நாளிதழ்






| Vol: 04 | Issue: 031 | 4 Pages | 31.08.2026 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 04 | இதழ்: 031 | 4 பக்கங்கள் | 31.08.2026 | திங்கட்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**அறனழீஇ யல்லவை செய்தலின் தீதே**
**புறனழீஇப் பொய்த்து நகை**

**விளக்கம்:** அறத்தை அழித்துப் பேசி அறமல்லாதவைகளைச்செய்வதைவிட, ஒருவன் இல்லாதவிடத்தில் அவனைப் பழித்துப் பேசி நேரில் பொய்யாக முகமலர்ந்து பேசுதல் தீமையாகும்.

# அமராவதி அணையில் இருந்து முதல் நீர் திறப்பு: முதல்வர் விஜய் உத்தரவு

சென்னை ஆக. 31

திருப்பூர் மாவட்டம் அமராவதி அணையிலிருந்து, நீர் திறந்து விட அனுமதி அளித்து தமிழக அரசு ஆணையிட்டுள்ளது.

தமிழக அரசின் செயலாளர் வெளியிட்டுள்ளசெய்திக்குறிப்பில், தமிழ்நாடு முதல்அமைச்சர் ஜோசப் விஜய்யின் உத்தரவிற்கிணங்க, தற்போது,எல்.நினோபாதிப்பினால் மழைப்பொழிவு இல்லாததால் அமராவதி ஆற்றில் செயல்படுத்தப்படும் குடிநீர் திட்டங்களுக்கு போதுமான நிலத்தடி நீர் உயர்வதற்கும், திருப்பூர்மற்றும்கரூர்மாவட்ட பொதுமக்களின் குடிநீர் தேவையினை பூர்த்தி செய்வதற்கும், திருப்பூர் மாவட்டம், அமராவதி அணையின் ஆற்று மதகு வழியாக 31.08.2026 முதல் 07.09.2026 வரை நாளொன்றுக்கு, வினாடிக்கு 1,000




கன அடி வீதம் 8 நாட்களுக்கும் போதிய மழைப்பொழிவு காரணமாக வரும் நாட்களில் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரிக்கும்பட்சத்தில், மேலும் 4 நாட்களுக்கு நாளொன்றுக்கு வினாடிக்கு 1,000 கன அடி வீதம், அமராவதி அணையின் நீர் இருப்பு மற்றும் நீர் வரத்தை பொறுத்து, அமராவதி அணையிலிருந்து, நீர் திறந்து விட அனுமதி அளித்து தமிழ்நாடுஅரசுஆணையிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 6 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொன்றவன் சுட்டுக்கொலை



நொய்டா, ஆக. 31

வீட்டின்அருகேவிளையாடிக் கொண்டிருந்த 6 வயது சிறுமியை பாலியல் வன்கொடுமை செய்து கொன்றவனை போலீசாரால் சுட்டுக்கொல்லப்பட்டான். உத்தரப்பிரதேச மாநிலம் நொய்டாவில் உள்ள ஹல்டோனி கிராமத்தைச் சேர்ந்த 6 வயது சிறுமி நேற்று முன்தினம் வீட்டிற்கு வெளியே விளையாடிக் கொண்டிருந்த நிலையில் திடீரென மாயமானார். சிறுமி நீண்ட நேரமாகியும் வீடு திரும்பாததால் குடும்பத்தினர் பதற்றமடைந்து அவரை பல்வேறு இடங்களில் தேடியுள்ளனர். எந்தத் தகவலும் கிடைக்காத நிலையில'. இது குறித்து போலீசில் புகார்அளித்தனர்.இதையடுத்து போலீசார்வழக்குப்பதிவு செய்து உடனடியாக சிறுமியைத் தேடும் பணியைத்தொடங்கினர். அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சி.சி.டி.வி. கேமராக்களின்பதிவுகளை ஆய்வுசெய்தபோது,முக்கியசி.சி.டி.வி.காட்சிகளல்,தில்பட்டாகிராமத்தைச் சேர்ந்த பல்ராஜ் என்பவர் சிறுமியை அழைத்துச்செல்வதும், பின்னர் சாக்குமூட்டையை எடுத்துக்கொண்டு அந்த நபர் வயல்வெளியை நோக்கிச் செல்வதும் பதிவாகியிருந்தது. இதையடுத்து பல்ராஜை பிடித்து போலீசார் விசாரித்தனர்.இதன் தொடர்ச்சியாக வயல்வெளியில் போலீசார் தீவிரமாக தேடிய போது அங்கு சாக்குமூட்டைக்குள் காணாமல் போன சிறுமியின் உடல் கண்டெடுக்கப்பட்டது. சிறுமி கொலை செய்யப்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டதை அடுத்து, போலீசார் விசார தீவிரப்படுத்தினர். இதற்கிடையே, சிறுமி கற்பழிக்கப்பட்டுகொலை செய்யப்பட்டதாக சிறுமியின் குடும்பத்தினர் குற்றம் சாட்டியுள்ளனர். ஆனால், இந்தக் குற்றச்சாட்டுகுறித்துஉறுதியானமுடிவுஎதுவும்இதுவரைவெளியாகவில்லை. சிறுமியின் பிரேதப் பரிசோதனை அறிக்கை வந்த பிறகே மரணத்துக்கான காரணம் மற்றும் பாலியல் வன்கொடுமை தொடர்பான முக்கிய விவரங்கள் தெரியவரும் என போலீசார் தெரிவித்துள்ளனர்.இந்நிலையில் நேற்றைய தினம் போலீஸ் காவலில் இருந்த பல்ராஜிடம் தொடர்ந்து விசாரணை நடத்தப்பட்டது.அப்போத", சிறுமியை கடத்திக் கொலை செய்ததை ஒப்புக் கொண்ட பல்ராஜ். கொலைக்குப் பயன்படுத்திய கத்தியை பார்க் போலீஸ் சோதனைச்சாவடி அருகே உள்ள பசுமைப்பகுதியில் மறைத்துவைத்திருப்பதாக தெரிவித்திருக்கிறார்.இதையடுத்து போலீசார் பல்ராஜை அந்த இடத்துக்கு அழைத்துச் சென்று மறைத்து வைத்த கத்தியை மீட்க முயன்றனர். அப்போது புதருக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த துப்பாக்கியை பல்ராஜ் எடுத்ததாகவும், அதை வைத்து போலீசாரை நோக்கி துப்பாக்கியால் சுட்டதாகவும் கூறப்படுகிறது.இந்தத்துப்பாக்கி சூட்டில் தலைமை காவலர் ரவி குமார் காயமடைந்தார்.இதையடுத்து போலீசார் தற்காப்புக்காக நடத்திய என்கவுண்டர் தாக்குதலில் பல்ராஜ் உடலில் தோட்டாபாய்ந்துபடுகாயமடைந்தார்.அதைத்தொடர்ந்துமருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்ட பல்ராஜ், சிகிச்சைப் பலனின்றி உயிரிழந்ததாக போலீசார்கூறியுள்ளனர்.என்கவுண்டர்தாக்குதலின்போது படுகாயமடைந்த காவலர்ரவிகுமாருக்கு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. பல்ராஜ் வைத்திருந்தசட்டவிரோதமான32ரகதுப்பாக்கி,3காலிதோட்டாக்கள்மற்றும் பயன்படுத்தாத தோட்டாக்கள் கைப்பற்றப்பட்டதாக போலீசார் தெரிவித்துள்ளனர்.கொல்லப் பட்டநபரின் குற்றப் பின்னணி குறித்தும் விசாரணை நடைபெற்று வருகிறது.மேலும் சிறுமியின் உடல் மருத்துவர்கள் அடங்கிய குழுவால் பிரேதப் பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது.இந்தப் பரிசோதனை வீடியோவாகவும் பதிவு செய்யப்படுகிறது. சிறுமியின் மரணத்துக்கான காரணம', அவருக்கு நேர்ந்த கொடுமை உள்ளிட்ட முக்கிய விவரங்கள் பிரேதப் பரிசோதனை அறிக்கை மூலம் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.சம்பவ இடத்தில் போலீசார் மற்றும் தடயவியல் குழுவினர் ஆய்வு செய்து தடயங்களைச் சேகரித்துள்ளனர். சிறுமியின் குடும்பத்தினர் வேலைக்குச் சென்றிருந்த நேரத்தில', வீட்டின் அருகே மசூதி பகுதியில் விளையாடிக்கொண்டிருந்த சிறுமியை பல்ராஜ் அழைத்துச்சென்று கொலை செய்தது உறுதி செய்யப்பட்டுள்ளது.

## ஊட்டி, கொடைக்கானலில் பாக்கெட் பால் விற்பனைக்கு தடை சென்னை ஐகோர்ட்டு உத்தரவு



சென்னை, ஆக. 31

தனியார் பால் நிறுவனங்களுக்கு பாக்கெட் பால் விற்பனைக்கு தடை விதித்து சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. சுற்றுச்சூழல் முக்கியத்துவம் வாய்ந்த ஊட்டி, கொடைக்கானல் உள்ளிட்ட மலைவாசஸ்தலங்களில் பிளாஸ்டிக் பயன்பாட்டை முழுமையாக கட்டுப்படுத்தும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக, பாக்கெட் பால் விற்பனையைத் தவிர்த்து தானியங்கி பால் விற்பனை எந்திரங்களை பயன்படுத்துமாறு தனியார் பால் நிறுவனங்களுக்கு சென்னை ஐகோர்ட்டு உத்தரவிட்டுள்ளது. மலைப்பகுதிகளில் பிளாஸ்டிக் தடையை முழுமையாக அமல்படுத்துவது தொடர்பான வழக்கு, சென்னை ஐகோர்ட்டு சிறப்பு அமர்வு முன்பு விசாரணையில் உள்ளது. இதன் போது, பிளாஸ்டிக் கவர்களில் பால் விற்பனை செய்வதற்கு மாற்று வழிகளை உருவாக்க வேண்டும் என நீதிபதிகள் அறிவுறுத்தியிருந்தனர். இதனைத் தொடர்ந்து, ஆவின் நிறுவனம் ஊட்டி மற்றும் கொடைக்கானலில் பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களில் சோதனை அடிப்படையில் தானியங்கி பால் விற்பனை எந்திரங்களை மீண்டும் பயன்பாட்டுக்கு கொண்டு வந்தது. இந்த வழக்கு நீதிபதிகள் என். சதீஷ்குமார் மற்றும் கே. ராஜசேகர் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது தமிழக அரசு சார்பில் நிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. அதில், கொடைக்கானலில் தானியங்கி எந்திரங்கள் மூலம் முதல் இரண்டு நாட்களில் 40 லிட்டர் பால் விற்பனை செய்யப்பட்டதாகவும், ஊட்டியில் வெறும் 6 லிட்டர் மட்டுமே விற்பனையானதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த விவரங்களை கவனித்த நீதிபதிகள், தானியங்கி பால் விற்பனை முறை குறித்து பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளிடையே போதிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவில்லை என அதிருப்தி தெரிவித்தனர். மேலும், தானியங்கி பால் விற்பனை எந்திரங்கள் குறித்து விரிவான விளம்பரங்கள் மேற்கொள்ள வேண்டும் என்றும், அவை பயன்பாட்டுக்கு வந்துள்ள பகுதிகளில் பாக்கெட் பால் விற்பனையை முழுமையாக நிறுத்த வேண்டும் என்றும் உத்தரவிட்டனர். ஆவின் நிறுவனத்தைப் போலவே, தனியார் பால் நிறுவனங்களும் ஊட்டி, கொடைக்கானல் உள்ளிட்ட மலைவாசஸ்தலங்களில் தங்களது சொந்த தானியங்கி பால் விற்பனை எந்திரங்களை நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் அறிவுறுத்தினர்.

## சென்னை: குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு ரூ.6 ஆயிரம் லஞ்சம் கேட்ட அரசு ஊழியர் கைது



சென்னை, ஆக. 31

குடிநீர் இணைப்பு வழங்குவதற்காக ரூ.6 ஆயிரம் லஞ்சம் கேட்ட அரசு ஊழியரை லஞ்ச ஒழிப்புதுறையினர்கைது செய்தனர். சென்னை மாவட்டம் மாதவரம் அருகே தணிக்காச்சலம் பகுதியை சேர்ந்தவர்ஜெயக்குமார்(வயது 46). இவர் தனது புதிய வீட்டிற்கு குடிநீர் இணைப்பு பெறுவதற்காக கழிவு நீரகற்று வாரியத்தின் மூலம் விண்ணப்பித்திருந்தார். அப்பகுதியில் குடிநீர்இணைப்புஉதவிப்பொறியாளராக முருகேசன் என்பவர்பணியாற்றி வந்தார். விண்ணப்பத்தை பார்த்து, இந்த வேலையை செய்வதற்கு ரூ.6 ஆயிரம் லஞ்சம் தருமாறு ஜெயக்குமாரிடம் கேட்டுள்ளார்.அரசு நிர்ணயித்த தொகையை விட, தனியாக லஞ்சம் கொடுக்க மனமில்லாத ஜெயக்குமார், இதனை ஆலந்தூரில் உள்ள லஞ்ச ஒழிப்புத் துறை அலுவகத்திற்கு சென்று புகார் அளித்தார். இதன் அடிப்படையில், விசாரணை மேற்கொண்ட லஞ்ச ஒழிப்புத்துறை அதிகாரிகள் உதவிப் பொறியாளரை கையும், களவுமாக பிடிக்க திட்டம் தீட்டினர். அவர்கள் ரசாயனம் தடவிய ரூ.6 ஆயிரம் பணத்தை ஜெயக்குமாரிடம் கொடுத்து முருகேசனிடம் வழங்கும்படி கூறினர். கைதுஅந்த பணத்தை ஜெயக்குமார் எடுத்து சென்று அலுவலகத்தில் இருந்த முருகேசனிடம் வழங்கினார். அதை பெற்றவுடன், அங்கு சாதாரண உடையில் மறைந்திருந்த லஞ்ச ஒழிப்பு அதிகாரிகள் அவரைகைது செய்தனர். பின்னர், அவரது கைகளில் ரசாயன சோதனை நடத்தியபோது லஞ்சம் பெற்றது அறிவியல் பூர்வமாக உறுதி செய்யப்பட்டது. இதனை தொடர்ந்து ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்குப் பதிவு செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி சிறையில் அடைத்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## கோவை: கயிறு கட்டி பற்களால் மினி பஸ்ஸை இழுத்து சாதனை படைத்த 15 வயது பள்ளி மாணவன்

கோயம்புத்தூர், ஆக. 31

கோயம்புத்தூரில் பற்களால் 3.5 டன் எடையுள்ள மினி பஸ்ஸை இழுத்து 15 வயது பள்ளி மாணவன் ஒருவர் புதிய உலக சாதனை படைத்துள்ளார். கோவை ஒண்டிப்புதுார் பகுதியைச் சேர்ந்த மாணவன் பிரதியுமன் (வயது 15). அந்த மாணவன், அங்குள்ள தனியார் புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் படித்து வருகிறார். கராத்தே கலையையும் கற்று வரும் அவர், தனது அசாத்திய உடல் வலிமையை நிரூபிக்கும் வகையில் இந்த சாதனை முயற்சியில் ஈடுபட்டார். கடந்த 27ந்தேதி அன்று அந்த மாணவர் படிக்கும் பள்ளியின் வளாகத்தில் இந்த சாதனை நிகழ்த்தப்பட்டது. அந்த நிகழ்வில், சுமார்3,500கிலோ(3.5டன்)எடையுள்ள மினிபஸ்ஸைதனதுபற்களால்கயிற்றைக் கவ்விப் பிடித்து, பிரதியுமன் வெற்றிகரமாக இழுத்துக் காட்டினார். அவருடைய இந்த வியக்கத்தக்க முயற்சியைப் பார்த்த அங்கிருந்த



பொதுமக்கள் மற்றும் சக மாணவர்கள் அனைவரும்கைதட்டி பாராட்டிதங்களது வாழ்த்துகளைத்தெரிவித்தனர்.மாணவன் பிரதியுமனின் இந்த அசாத்திய முயற்சி சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டு, 'புக்ஆப்வேர்ல்ட்ரெக்கார்ட்ஸ்'சாதனைப் புத்தகத்தில் அதிகாரப்பூர்வமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. சாதனை நிகழ்த்தப்பட்ட உடனே, அந்த இடத்திலேயே அவருக்கு உலக சாதனைக்கான சான்றிதழும் பதக்கமும் நடுவர்களால் வழங்கி கவுரவிக்கப்பட்டது.

## கொல்கத்தா மெஸ்ஸி நிகழ்ச்சி விவகாரம்: ரசிகர்களுக்கு பணம் திருப்பி வழங்கப்படும் சுவேந்து அதிகாரி



கொல்கத்தா ஆக. 31

கால்பந்துநட்சத்திரம்லயோனல் மெஸ்ஸியை காண டிக்கெட் வாங்கிய சுமார் 33 ஆயிரம் ரசிகர்களுக்கு பணத்தை திருப்பி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மேற்கு வங்காள முதல்மந்திரி சுவேந்து அதிகாரி தெரிவித்துள்ளார். நிகழ்ச்சி பாதியிலேயே நிறுத்தம்கடந்த 2025ம் ஆண்டு டிசம்பர் 13ந் தேதி கொல்கத்தாவில் உள்ள யுவ பாரதி மைதானத்தில் மெஸ்ஸி பங்கேற்ற நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் கூட்ட நெரிசல் மற்றும் நிர்வாக குளறுபடிகள் காரணமாக நிகழ்ச்சி பாதியிலேயே நிறுத்தப்பட்டது என்று புகார் எழுந்தது. மெஸ்ஸியை காண ரூ.4 ஆயிரம் மற்றும் ரூ.6 ஆயிரம் செலுத்தி டிக்கெட் வாங்கிய ரசிகர்கள், தங்களது பணத்தை திருப்பி வழங்க வேண்டும் என கோரிக்கை விடுத்திருந்தனர்.ரசிகர்கள் செலுத்திய பணம்இந்த நிலையில், தேசிய விளையாட்டு தின நிகழ்ச்சியில் பேசிய சுவேந்து அதிகாரி, சுமார் ரூ.33 ஆயிரம் விளையாட்டு ரசிகர்கள் செலுத்திய பணத்தை திருப்பி வழங்குவதற்கான உள்நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார். மாநில விளையாட்டு பட்ஜெட்டில் இருந்து இந்த தொகை வழங்கப்படும் என்றும் அவர் கூறினார். எனினும், பணத்தை எப்போது முதல் திருப்பி வழங்குவது என்பது குறித்த விவரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

## வருங்கால மனைவிக்கு திருமண பரிசாக நிலவில் 1 ஏக்கர் நிலம் வாங்கிய புது மாப்பிள்ளை

நாமக்கல், ஆக. 31

நாமக்கல் மாவட்டத்தைச் சேர்ந்த ஒரு வாலிபர், நிஜமாகவே நிலவில் ஒரு ஏக்கர் நிலத்தைத் தனது வருங்கால மனைவிக்கு திருமண பரிசாக வாங்கி, ஒட்டுமொத்த தமிழகத்தையும் திரும்பி பார்க்க வைத்துள்ளார். நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் அருகே உள்ள நாமகிரிப்பேட்டையைச் சேர்ந்தவர் அசோக் சரவணன் (வயது 32). கட்டிடப் பொறியாளரான இவருக்கும், ராதிகா (என்ற வர்ஷினி) என்ற பெண்ணுக்கும் வருகிற செப்டம்பர் மாதம் 17ந் தேதிதிருமணம்நடக்கமுடிவுசெய்யப்பட்டுள்ளது.திருமணத்திற்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், தனது வருங்கால மனைவிக்கு வாழ்நாளில் மறக்க முடியாத ஒரு பரிசை வழங்க அசோக் சரவணன் திட்டமிட்டார். வழக்கமாக திருமணத்தின் போது மணப்பெண்ணுக்கு தங்க நகைகள், சொகுசு கார்கள் அல்லது பட்டு புடவைகள் வழங்குவதுதான் வழக்கம். ஆனால், அசோக் சரவணன் இந்த வழக்கமான பாணியை முற்றிலுமாக தள்ளி வைத்தார்.




விண்வெளியில் உள்ள நிலவில் தனது காதல் மனைவிக்கு இடம் வாங்கி தர ஆசைப்பட்டார். இதற்காக, லண்டனில் வசித்து வரும் தனது சகோதரியின் உதவியை அவர் நாடினார். அவரது வழிகாட்டுதலின்படி, சர்வதேச நிலவு நிலப் பதிவேடு இணையதளம் மூலம் ஆன்லைனில் தொடர்பு கொண்டு, நிலவில் வெற்றிகரமாக 1 ஏக்கர்நிலத்தைவிலைக்குவாங்கினார்.நிலாநிலத்திற்கானஅதிகாரப்பூர்வ பத்திரப்பதிவு மற்றும் உரிமை சான்றிதழ்கள் லண்டனில் இருந்து அசோக் சரவணனின் கைக்கு வந்து சேர்ந்தன. இதனை தனது வருங்கால மனைவி ராதிகாவிடம் காண்பித்து அவர் இன்ப அதிர்ச்சி கொடுத்தார். இந்த விபரத்தை அறிந்த உறவினர்களும், நாமகிரிப்பேட்டை பகுதி பொதுமக்களும், "இப்படியும் ஒரு காதலா!" என்று ஆச்சரியமடைந்து, புது மாப்பிள்ளையின் இந்த வித்தியாசமான முயற்சிக்கு தங்களின் மனமார்ந்த பாராட்டுகளைக் குவித்து வருகின்றனர்.

# அரசு ஊழியர்களுக்கான மாதாந்திர இடைக்கால உதவித்தொகை விதிகளில் திருத்தம்



சென்னை, ஆக. 31

தமிழக அரசின் நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர்எம்.ஏ.சித்திக்வெளியிட்டஅரசாணையில் கூறியிருப்பதாவது:கடந்த 1.1.2026 அன்று அல்லது அதற்கு பிறகு பணிநிறைவு பெற்றவர்கள், பணியின்போது இறந்தவர்கள் மற்றும் பணிநிறைவுக்கு பின் இறந்த பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தில் (சி.பி.எஸ்.) உள்ள தகுதியுள்ள அரசு ஊழியர்களுக்கு மாதாந்திர இடைக்கால உதவித்தொகை மற்றும் குடும்ப உதவித்தொகை வழங்கும் அரசாணை கடந்த 16.6.2026 அன்று நிதித் துறையால் வெளியிடப்பட்டது. அதன்படி, கடைசியாகப் பெற்ற அடிப்படை ஊதியத்தில் 30 சதவீதம் அல்லது ரூ.10 ஆயிரம் இதில் எது அதிகமோ, அத்தொகையுடன் 60 சதவீதம் அகவிலைப்படி நிவாரணமும் வழங்கப்பட்டது. 6வது ஊதியக்குழுவின் கீழ் சம்பளம் பெற்று ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு 1.1.2026 முதல் அகவிலைப்படி விகிதம் 262 சதவீதம் என்பதால், இவ்விதிகளில் திருத்தம் செய்து தற்போது புதிய அரசாணை பிறப்பிக்கப்படுகிறது. அதன் அடிப்படையில், 6வது ஊதியக்குழு வின் கீழ் கடைசியாகச் சம்பளம் பெற்று, 30 சதவீத அடிப்படை ஊதியம் ரூ.10 ஆயிரம் மற்றும் அதற்கு அதிகமாக இருந்து. 7வது ஊதியக்குழுவிற்கு மாற்றப்படாத ஊழியர்களுக்கு அகவிலைப்படி நிவாரணம் 262 சதவீத விகிதத்தில் வழங்கப்படும்.6 வது ஊதியக்குழுவின் கீழ் 30 சதவீத அடிப்படை ஊதியம் ரூ.10 ஆயிரத்திற்கும் குறைவாக இருந்தால், இடைக்காலத்தில் குறைந்தபட்சத்தொகை ரூ.10 ஆயிரமாகஉயர்த்தப்பட்டு60சதவீதம்அகவிலைப்படி நிவாரணம் வழங்கப்படும். ஆனால், 7வது ஊதியக்குழுவின் கீழ் சம்பளம் பெற்ற அரசு ஊழியர்களுக்கு60சதவீதம்மட்டுமேஅகவிலைப்படி நிவாரணமாக கணக்கிடப்படும். இதனடிப்படையில் கருவூலக்கணக்கு ஆணையர் நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பைக் மீது கார் மோதி தம்பதி காயம்: லஞ்ச ஒழிப்பு போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு சிறை



காரைக்குடி, ஆக. 31

பைக் மீது கார் மோதி தம்பதி காயமடைந்த வழக்கில், சம்பந்தப்பட்ட லஞ்ச ஒழிப்பு போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு சிறை தண்டனை விதிக்கபப்பட்டது.புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் தாலுகா ஊனையூர் பகுதியை சேர்ந்தவர் சுப்பிரமணியன். இவருடைய மகன் கார்த்திகேயன். இவருடைய மனைவி தமிழ்ச்செல்வி. கடந்த 2021ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 16ந்தேதி கணவன் மனைவி இருவரும் ஊனையூரில் இருந்து காரைக்குடியில் உள்ள மருத்துவமனைக்கு பைக்கில் சென்று கொண்டிருந்தனர்.மறிச்சுகட்டு பாலம் அருகே சென்றபோது எதிரேவந்தகார், பைக்மீது பயங்கரமாக மோதியது. இதில் தூக்கி வீசப்பட்ட கார்த்திகேயன் பலத்த காயம் அடைந்தார். தமிழ்ச்செல்வி லேசான காயம் அடைந்தார். இதையடுத்து அவ்வழியாக சென்றவர்கள் 2 பேரையும் மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் திருமயம் மருத்துவமனைக்கு கொண்டு சென்றனர். அங்கு அவர்களுக்குமுதலுதவி சி கி ச் சை அ ளி க் க ப் ப ட் ட து . பின்னர்அவர்கள்மேல்சிகிச்சைக்காகபுதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இதுகுறித்த புகாரின் பேரில் செட்டிநாடு போலீசார் காரை ஓட்டி வந்த காரைக்குடி பாரிநகரை சேர்ந்த பீட்டர் (வயது 51) என்பவர் மீது வழக்குப்பதிவு செய்தனர். இவர்தற்போது புதுக்கோட்டையில் லஞ்ச ஒழிப்பு போலீஸ் இன்ஸ்பெக்டராக வேலைபார்த்து வருகிறார்.இந்த வழக்கு காரைக்குடி கோர்ட்டில் நடைபெற்றது. அரசு தரப்பில் வக்கீல் செல்வராஜ் ஆஜரானார். வழக்கை விசாரித்த நீதிபதி கார்மேக கண்ணன், லஞ்ச ஒழிப்பு போலீஸ் இன்ஸ்பெக்டர் பீட்டருக்கு ஒன்றரை ஆண்டு சிறை தண்டனையும், ரூ.2 ஆயிரத்து 500 அபராதமும் விதித்து தீர்ப்பு கூறினார்.

# தூத்துக்குடி துறைமுகத்தில் முதல்முறையாக கச்சா பாமாயில் இறக்குமதி..!



தூத்துக்குடி, ஆக. 31

தூத்துக்குடி துறைமுகத்தில் முதல் முறையாக மலேசியா கப்பலில் இருந்து 15 ஆயிரம் டன் கச்சா பாமாயிலை இறக்கி சாதனை படைக்கப்பட்டது. மலேசியாவின் குனாக் துறைமுகத்தில் இருந்து 15 ஆயிரம் டன் கச்சா பாமாயிலை ஏற்றிக்கொண்டு வந்த சரக்கு கப்பல் நேற்று முன்தினம் தூத்துக்குடி வ.உ.சி. துறைமுகத்தை வந்தடைந்தது. 143 மீட்டர் நீளமுள்ள இந்த கப்பல் 9.70 மீட்டர் மிதவை ஆழம் கொண்டது. துறைமுக ஆணைய தலைவர் சுஷாந்தகுமார் புரோஹித் முன்னிலையில் கச்சா பாமாயிலை இறக்கும் பணி தொடங்கியது. நிகழ்ச்சியில் துணைத் தலைவர் ராஜேஷ் சவுந்தரராஜன், கே.டி.வி. ஹெல்த் புட் நிறுவன நிர்வாக இயக்குனர் கே.டி.வி.நாராயணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.மாற்றியமைக்கப்பட்ட முனையத்தில் இருந்து சுமார் 5 கி.மீ. தொலைவில் உள்ள சேமிப்பு தொட்டிகளுக்கு குழாய்கள் மூலம் பாமாயில் கொண்டு செல்லும் வசதி ஏற்படுத்தப்பட்டு உள்ளது. கப்பலில் உள்ள 15 ஆயிரம் டன் பாமாயிலும் நாளைக்குள் (திங்கட்கிழமை) இறக்கப்பட்டு விடும்.கே.டி.வி. ஹெல்த் புட் நிறுவனம் துறைமுகத்தின் தொழில் மண்டலத்தில்4சேமிப்புதொட்டிகளைஅமைத்துள்ளது. இந்த நிறுவனம் நாளொன்றுக்கு 1,000 டன் சுத்திகரிக்கப்பட்ட பாமோலின் தயாரிக்கும் திறன் கொண்டது.இங்கு தயாரிக்கப்படும் பாமோலின், தென் மாவட்டங்கள் உள்ளிட்ட பகுதிகளில் உள்ளூர் நுகர்வுக்காக வினியோகிக்கப்படுகிறது. துறைமுகம் சார்ந்த தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் வ.உ.சி. துறைமுக நிர்வாகம் சுமார் 1,633 ஏக்கர் நிலத்தை மின் உற்பத்திநிலையங்கள்,ரசாயனதொழில்கள்,கிடங்குகள், உணவு பதப்படுத்துதல், சமையல் எண்ணெய் மற்றும் பசுமை ஹைட்ரஜன் உள்ளிட்ட தொழில்களுக்கு ஒதுக்கி உள்ளது.மாற்றியமைக்கப்பட்ட நிலக்கரி முனையத்தில் முதல் முறையாக கச்சா பாமாயில் கப்பல் கையாளப்பட்டிருப்பது, துறைமுகத்தில் சரக்கு வகைகளைப்பல்வகைப்படுத்தவும்,துறைமுகம்சார்ந்த தொழில்களின் வளர்ச்சிக்கும், பிராந்திய உணவு பதப்படுத்துதல் மற்றும் சமையல் எண்ணெய் துறையின் விரிவாக்கத்துக்கும் உதவும் என்று துறைமுக ஆணைய தலைவர் சுஷாந்த குமார் புரோஹித் தெரிவித்தார்.

# வடகிழக்குப் பருவமழை: சென்னையில் முன்னெச்சரிக்கைப் பணிகள் குறித்து ஆய்வு..!



சென்னை, ஆக. 31

வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் மண்டல அளவில் நியமிக்கப்பட்டுள்ள கண்காணிப்பு அலுவலர்கள் முன்னெச்சரிக்கைப் பணிகளை இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்திருப் பதாவது;

தமிழ்நாடு முதல்அமைச்சரின், பெருநகர சென்னை மாநகராட்சியில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மேற்கொள்ளப்படும் முன்னெச்சரிக்கை பணிகளைகண்காணித்துஉரியமீட்புநடவடிக்கைகள் மேற்கொள்வதற்காக மண்டல அளவில் அமைச்சர் பெருமக்கள் மற்றும் கண்காணிப்பு அலுவலரர்களை நியமித்து உத்தரவிட்டுள்ளார்கள்.இதனைத் தொடர்ந்து, மண்டல கண்காணிப்பு அலுவலர்கள் தங்களது மண்டலங்களில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு நடைபெற்று வரும் முன்னெச்சரிக்கை பணிகளை கள ஆய்வு செய்து, பணிகளை விரைவு படுத்தி வருகின்றனர்.இதன் ஒரு பகுதியாக, இன்று (29.08.2026) திரு.வி..க. நகர் மண்டல கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழகம் மேலாண்மை இயக்குநர் பி. கணேசன், திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு 77க்குட்பட்ட யானைகவுனி சாலையில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, வார்டு 73க்குட்பட்ட ஸ்டிபன்சன் சாலை, செங்கை சிவம் பாலம் பகுதியில் உள்ள ஓட்டேரி நல்லா கால்வாயில் உள்ள மோட்டார் பம்புடன் கூடிய மதகு, வார்டு 75க்குட்பட்ட எஸ்எஸ்புரம்பகுதியில்உள்ளஓட்டேரி நல்லா கால்வாயில் கட்டப்பட்டு வரும் தடுப்புச் சுவர் கட்டும் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திடவும், பம்புடன் கூடிய மதகினை தயார் நிலையில் வைத்திடவும் அலுவலர்களுக்கு அறிவுத்தினார். அண்ணாநகர் மண்டல கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ள சமூக பாதுகாப்புத் திட்ட இயக்குநர் காயத்ரி கிருஷ்ணன், அண்ணாநகர் மண்டலம், வார்டு103க்குட்பட்ட அண்ணாநகர் ரவுண்டானா பகுதியில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, வார்டு99க்குட்பட்ட பிரிக்லின் சாலையில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணி, ஓட்டேரி நல்லா கால்வாயில் தடுப்புச் சுவர் உயர்த்திக் கட்டும் பணி உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# பெண்ணை கொன்று உடலை கூறுபோட்ட கள்ளக்காதலன்... பரபரப்பு தகவல்கள்



சென்னை, ஆக. 31

சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்தில் இருந்து கடந்த 5ந்தேதி எக்ஸ்பிரஸ் ரெயில் ஒன்று உத்தரப்பிரதேச மாநிலம் ஆக்ரா ரெயில் நிலையத்தை சென்றடைந்தது. அப்போது ரெயிலின்கடைசி பெட்டியில் யாரும் உரிமை கோராதசிவப்புநிற சூட்கேஸ் ஒன்றுகிடந்தது. போலீசார் அதைசந்தேகத்தின்பேரில்திறந்துபார்த்தனர். அப்போது உள்ளே தலை இல்லாத மனித எலும்புக்கூடுகள் மற்றும் சில உடல் உறுப்புகள் இருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். இதையடுத்து போலீசார் எலும்புக்கூடு கள் மற்றும் உடல் உறுப்புகளை கைப்பற்றி தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். மேலும், அவை யாருடையது? எங்கிருந்து கொண்டு வரப்பட்டது? என்பது குறித்து தீவிர விசாரணை நடத்தினர். இதன் ஒரு பகுதியாக ஆக்ரா போலீசார் சென்னை சென்டிரல் ரெயில் நிலையத் தில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை ஆய்வு செய்தனர். அப்போது ஒரு ஆணும், பெண்ணும் சேர்ந்து சிவப்பு நிற சூட்கேஸ் ஒன்றை சென்டிரல் ரெயில் நிலையத்தில் இருந்து ஆக்ரா செல்லும் தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரெயிலின் பின்புற பெட்டியில் ஏற்றிவிட்டு இறங்கிச் செல்லும் காட்சி பதிவாகி இருந்தது. இதையடுத்து அவர்கள் யார்? எங்கிருந்து வந்தனர்? என்பது குறித்து பல்வேறு ரெயில் நிலையங்களில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளையும் போலீசார் ஆய்வு செய்தனர். அப்போது சிவப்பு நிற சூட்கேசை ரெயிலில் ஏற்றியவர்கள் கூடுவாஞ்சேரி ரெயில் நிலையத்தில் இறங்கி சென்றது கண்டுபிடிக்கப்பட்டது. இதுகுறித்த தகவலின்பேரில் கூடுவாஞ்சேரி போலீசார் கூடுவாஞ்சேரி ரெயில் நிலையம் அருகே பல்வேறு பகுதிகளில் உள்ள கண்காணிப்பு கேமராக்களை ஆய்வு செய்தனர். அப் போது அந்த இருவரும் கூடுவாஞ்சேரி மசூதி தெருவில் உள்ள ஒரு வீட்டுக்கு சென்றது தெரியவந்தது. சம்பவ இடத்துக்கு விரைந்து சென்ற போலீசார் பூட்டப்பட்டு இருந்த அந்த வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று சோதனை நடத்தினர். அப்போது வீட்டுக்குள் பிரியாணி தயாரிக்க பயன்படுத் தப்படும் பெரிய அண்டா பாத்திரம் ஒன்று சிவப்பு நிற துணியால் மூடப்பட்டிருந்தது. மேலும் வீட்டுக்குள் கடுமையான துர்நாற்றம் வீசியது. அந்த பாத்திரத்தை திறந்து பார்த்தபோது அதற்குள் மனித உடலின் சதைப்பகுதிகள் துண்டு துண்டாக வெட்டப்பட்ட நிலையில் இருந்தன. அந்த சதைப்பகுதிகளில் மைதா மாவு கலக்கப்பட்டிருந்தது. இதனால் அதிர்ச்சி அடைந்த போலீசார், மனித சதைப்பகுதிகளை அண்டாவுடன் கைப்பற்றி தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். இதற்கிடையே ஆக்ரா ரெயில் நிலையத்தில் கைப்பற்றப்பட்ட மனித எலும்புகள் மற்றும் உடல் உறுப்புகளும், கூடுவாஞ்சேரி வீட்டில் கைப்பற்றப்பட்ட மனித சதைப்பகுதிகளும் ஒரே நபருடையதா? என்பது குறித்து தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர். அதில் ஒரே நபருடையது என்பது உறுதி யானது. தொடர் விசாரணையில் கொலை செய்யப்பட்டவர் ஒடிசா மாநிலத்தைச் சேர்ந்த ஹயாத் நிஷா (வயது 38) என்பது தெரியவந்தது. இவர் சென்னை தாம்பரம் அருகே உள்ள தனியார் ஏற்றுமதி நிறுவனத்தில் வேலை செய்து வந்துள்ளார். இவருக்கு 19 வயதில் ஒரு மகனும் உள்ளார். அவர் தாம்பரத் தில் ஏ.சி. மெக்கானிக்காக வேலை பார்த்து வருகிறார். அவரி டம் நடத்தப்பட்ட விசாரணையில் 'தனதுதாயார்ஒருவருடன் தகாத உறவில் இருந்ததால் நான் தனியாக தங்கி வேலை செய்து வருகிறேன்' என கூறியுள்ளார். இதையடுத்து கூடுவாஞ்சேரி போலீசார் ஹயாத் நிஷாவுடன் கள்ளத்தொடர்பில்இருந்தநபர்யார்?எனவிசாரணையை தீவிரப்படுத்தினர். அதில், ஹயாத் நிஷா தங்கி இருந்த வீட் டில் கடந்த 2 மாதங்களாக தம்பதிகளான அசாம் மாநிலத்தை சேர்ந்த மணிக்உத்தீன் லஸ்கர் (22) என்பவரும், ஒடிசா மாநி லத்தை சேர்ந்த பகவதி மாஜி என்பவரும் தங்கி இருந்தது தெரியவந்தது. இதனால் போலீசாரின் சந்தேகம் அந்த தம்பதி யினர் மீது திரும்பியது. ஹயாத் நிஷாவை கொலை செய்து விட்டு இருவரும் தங்களது சொந்த ஊர்களான அசாம் அல்லது ஒடிசாவுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் என்ற கோணத்தில் போலீசார் விசாரணை நடத்தினர். இதையடுத்து கூடுவாஞ்சேரி போலீஸ் இன்ஸ்பெக்டர் கோவிந்தராஜ் தலைமையில் தனிப்படை போலீசார் அசாம் மாநிலத்திற்கு விரைந்து சென்றனர். ஒரு வாரத்துக்கும் மேலாக போலீசார் அவர்களை தேடி வந்த நிலையில், அவர்கள் மணிப்பூர் மாநிலம் ஜிரிபாம் மாவட்டத்தில் உள்ள காசிம்பூர் பகுதியில் பதுங்கி இருப்பது தெரியவந்தது. இதையடுத்து தனிப்படை போலீசார் மணிப்பூர்போலீசாரின்உதவியுடன்காசிம்பூர்பகுதிக்குச் சென்று அங்கு பதுங்கி யிருந்த மணிக்உத்தீன் லஸ்கர் மற்றும் பகவதி மாஜி ஆகிய இருவரையும் மடக்கிப் பிடித்துகைதுசெய்தனர். தற்போதுகைதானஇருவரையும் தமிழகத்திற்குஅழைத்து வருவதற்காக நடவடிக்கையில் போலீசார் ஈடுபட்டுள்ளனர். மேலும் கைது செய்யப்பட்டுள்ள தம்பதியினரை சம்பந்தப்பட்ட இடங்களுக்குஅழைத்துச்சென்றுவிசாரணைநடத்தவும், அவர்கள் கொலை செய்த விதம் குறித்து விசாரிக்கவும் போலீசார் திட்டமிட்டுள்ளனர். அவர்களிடம் நடத்தப்படும் தொடர் விசாரணைக்குப் பிறகே இந்த கொலையின் முழுமையான பின்னணி குறித்து தெரியவரும்.

# நாகை: வேளாங்கண்ணி பேராலய திருவிழாவில் வெடித்து சிதறிய ஹீலியம் பலூன்; 2 பேர் படுகாயம்



நாகை ஆக. 31

நாகை வேளாங்கண்ணி பேராலய திருவிழாவில் ஹீலியம் பலூன் வெடித்து சிதறியதில் 2 பேர் படுகாயம் அடைந்தனர். நாகப்பட்டினம் மாவட்டம், வேளாங்கண்ணியில் பிரசித்தி பெற்ற புனித ஆரோக்கிய மாதா பேராலயம் அமைந்துள்ளது. 'கீழ்திசை நாடுகளின் லூர்து நகரம்' என அழைக்கப்படும் இங்கு ஆண்டுதோறும் பெருவிழா 10 நாட்கள் விமரிசையாக நடைபெறுவது வழக்கம். அதன்படி, இந்த ஆண்டுக்கான பெருவிழா நேற்று (சனிக்கிழமை) மாலை கொடியேற்றத்துடன் தொடங்கியது. முன்னதாக மாலை 5.45 மணிக்கு தஞ்சை மறை மாவட்ட ஆயர் சகாயராஜ் கொடியை புனிதம் செய்து வைத்த பின், கொடி ஊர்வலம் புறப்பட்டது. பின்னர், கொடிக்கம்பத்தில் தஞ்சைமறைமாவட்டஆயர்சகாயராஜ்கொடிஏற்றினார். இந்த நிலையில், வேளாங்கண்ணி கொடியேற்ற திருவிழாவில் பட்டாசுகள் பட்டு பெரிய அளவிலான அலங்கார ஹீலியன் பலூன் வெடித்து சிதறியது. இதில் பக்தர்கள்மத்தியில்தீப்பற்றிஎரிந்தபடிபலூன்விழுந்தது. இந்த சம்பவத்தில் சென்னையை சேர்ந்த இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.உடனடியாக தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர். இதனால் திருவிழாவில் பக்தர்கள் இடையே சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பு: 13வது நாளாக பரிசல் இயக்க தடை



பென்னாடம், ஆக. 31

கர்நாடகத்தில்காவிரிபடுகையில்மண்டியாமாவட்டம் ஸ்ரீரங்கப்பட்டணாவில் கிருஷ்ணராஜ சாகர்(கே.ஆர்.எஸ்.) அணை அமைந்துள்ளது. இந்த அணையின் நீர்ப்பிடிப்பு பகுதியாக குடகு மாவட்டம் மற்றும் கேரளம் மாநிலம் வயநாடு ஆகிய மாவட்டங்கள் உள்ளன. இந்த நிலையில் குடகில் கடந்த சில தினங்களுக்கு முன்பு கனமழை பெய்தது. இதன்காரணமாக கே.ஆர்.எஸ். அணைக்கு நீர்வரத்து அதிகரித்தது. நேற்று முன்தினம் அணைக்கு நீர்வரத்து வினாடிக்கு 8 ஆயிரத்து 589 கனஅடியாக இருந்தது. இந்த நிலையில் தற்போது குடகில் மழை இல்லாததால் அணைக்கு நீர்வரத்தும் குறைந்துள்ளது.

நேற்று இரவு 8 மணி நிலவரப்படி அணைக்கு வினாடிக்கு 7 ஆயிரத்து 85 கனஅடி ஆக இருந்தது. 124.80 அடி கொள்ளளவு கொண்ட கே.ஆர்.எஸ். அணையின் நீர்மட்டம் நேற்று இரவு 8 மணி நிலவரப்படி 110.26 அடியாக இருந்தது. அணையில் இருந்து வினாடிக்கு 7 ஆயிரத்து 179 கனஅடி நீர் காவிரி ஆற்றில் திறக்கப்பட்டுள்ளது. இதுபோல் மைசூரு மாவட்டம் எச்.டி.கோட்டையில் உள்ள கபினி அணைக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. நேற்று முன்தினம் வினாடிக்கு 6 ஆயிரத்து 45 கன அடியாக இருந்த நீர்வரத்து நேற்று வினாடிக்கு 4 ஆயிரத்து 993 கனஅடியாக குறைந்துள்ளது. கடல் மட்டத்தில் இருந்து 2,284 அடி கொள்ளளவு கொண்ட கபினி அணையின் நீர்மட்டம் நேற்று காலை நிலவரப்படி 2,271.90 அடியாக இருந்தது. அணையில் இருந்து காவிரியில் வினாடிக்கு 6 ஆயிரத்து 600 கன அடி நீர் திறந்து விடப்பட்டு உள்ளது.

கே.ஆர்.எஸ். கபினி அணைகளில் இருந்து திறக்கப்படும் தண்ணீர் டி.நரசிப்புரா அருகே ஒன்றாக சங்கமித்து அகண்ட காவிரியாக தமிழகம் நோக்கி வருகிறது. அதன்படி நேற்று இரு அணைகளில் இருந்தும் வினாடிக்கு 13 ஆயிரத்து 685 கனஅடி நீர் தமிழகத்துக்கு காவிரியில் திறந்து விடப்பட்டது. நேற்று முன்தினம் வினாடிக்கு 10 ஆயிரத்து 758 கனஅடி நீர் திறக்கப்பட்ட நிலையில் நேற்று தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டது. கர்நாடகா அணைகளில் இருந்து திறந்து விடப்படும் தண்ணீரின் அளவைப் பொறுத்து

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து அதிகரிப்பதும், குறைவதும் வழக்கம். இந்நிலையில் ஒகேனக்கல் காவிரி ஆற்றில் இன்று காலை 6 மணி நிலவரப்படி வினாடிக்கு 10,000 கன அடியாக நீர்வரத்து அதிகரித்துள்ளது. இதனால் ஒகேனக்கல்லில் உள்ள ஐந்தருவி, மெயின் அருவி, சினி பால்ஸ் ஆகிய அருவிகளிலும் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டியது. காவிரி ஆற்றில் நீர்வரத்தை தமிழககர்நாடகமாநில எல்லையானபிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தீவிரமாக கண்காணித்துவருகின்றனர். ஒகேனக்கல்காவிரிஆற்றில் நீர்வரத்து தொடர்ந்து அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளதால் சுற்றுலா பயணிகளின் பாதுகாப்பு கருதி பரிசல் இயக்க விதிக்கப்பட்ட தடையானது தொடர்ந்து 13வது நாளாக நீடிக்கிறது.

# அமைச்சர் மரிய வில்சனின் எம்.எல்.ஏ. சான்றிதழை திரும்ப பெற வேண்டும்தேர்தல் கமிஷனுக்கு வக்கீல் நோட்டீஸ்




சென்னை, ஆக. 31

சென்னை,தன்னுடைய கல்வி நிறுவனத்துக்காக லஞ்சம் கொடுத்ததாக சட்டசபை யில் பேசிய அமைச்சர் மரிய வில்சன் மீது ஊழல் வழக்குப்பதிவு செய்வதுடன், அவருடைய எம்.எல்.ஏ. சான்றிதழை திரும்ப பெற வேண்டும் என்று தேர்தல் கமிஷனுக்கும், லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கும் வக்கீல் நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது. இந்திய தேர்தல் கமிஷனர்,

தமிழ்நாடு மாநில தேர்தல்கமிஷனர், மாநிலதலைமை தேர்தல் அதிகாரி, தமிழ்நாடு லஞ்ச ஒழிப்பு போலீஸ் இயக்குனர் ஆகியோருக்கு சென்னைஐகோர்ட்டு வக்கீல் சி.ஜெனிபர் என்பவர் தன் வக்கீல் பி.விஜயேந்திரன் மூலம் அனுப்பியுள்ள வக்கீல் நோட்டீசில் கூறியிருப்பதாவது:தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் ஆர்.கே.நகர் தொகுதியில் த.வெ.க., சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் மரிய வில்சன். இவர், தற்போது மாநில நிதி அமைச்சராக உள்ளார். சமீபத்தில் சட்டசபையில் அவர் பேசும்போது தனது கல்வி நிறுவனத்துக்குஅனுமதிதொடர்பாகமுன்னாள் அமைச்சருக்கு லஞ்சம் கொடுத்ததாக கூறியுள்ளார். இது அரசியலமைப்புக்கு எதிரானது மட்டுமல்லாமல் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி குற்றமாகும் எனவே, அவர் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின்கீழ் வழக்குப்பதிவு செய்யப்பட வேண்டும்.அவர் அமைச்சராக பதவியேற்றபோது எடுத்த பதவி பிரமாணத்திற்கு முரணாகவும், தேர்தல் ஜனநாயகத்திற்கு விரோதமாகவும் செயல்பட்டுள்ளார்.மக்கள்பிரதிநிதித்துவசட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதியின் பதவியை திரும்ப பெற முடியாது. அதேநேரத்தில் அவர் தேர்தலில் வெற்றி பெற்று தொகுதி எம்.எல்.ஏ.வாக தேர்வானதற்காக வழங்கப்பட்ட சான்றிதழை திரும்ப பெற தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரம் உள்ளது. எனவே, அமைச்சர் மரிய வில்சன் மீது லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப்பதிவு செய்ய வேண்டும். இல்லையென்றால் கோர்ட்டு வாயிலாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.இவ்வாறு புகாரில் கூறப்பட்டுள்ளது.

# மாமியாரை குத்திக்கொன்ற புதுமாப்பிள்ளை: மனைவி கண்முன் வெறிச்செயல்



விருதுநகர், ஆக. 31

மனைவி குடும்பம் நடத்த வரமறுத்தது தொடர்பான தகராறில் மாமியாரை அவரது வீட்டில் புதுமாப்பிள்ளை கத்தியால் குத்தி கொலை செய்தார். தடுக்க வந்த மைத்துனருக்கும் சரமாரி கத்திக் குத்து விழுந்தது. விருதுநகர் அருகே பாலையம்பட்டியை சேர்ந்த அதிராமிளகி என்பவருடைய மகன் சிவா (வயது 26). இவர், சூலக்கரை பகுதியில் உள்ள தனியார் ஆடை தயாரிப்பு நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்தார். அதே நிறுவனத்தில் செவல்பட்டியை சேர்ந்த வாசகதேவி (27) என்பவரும் வேலைபார்த்தார்.அப்போது இருவருக்கும் இடையே காதல் ஏற்பட்டது. 6 மாதங்களுக்கு முன்பு திருமணம் செய்து கொண்டனர்.திருமணத்திற்கு பிறகு சிவாகட்டிட வேலைக்கு சென்று வந்தார். இவருக்கு மது குடிக்கும் பழக்கம் இருந்ததால் வேலையில்லாத நாட்களில் மது குடித்து விட்டு வந்து வாசகதேவியிடம் தகராறு செய்து வந்ததாக கூறப்படுகிறது.இதனால் இவர்களுக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்பட்டு வந்தது. இதன்காரணமாக வாசகதேவி கணவரை பிரிந்து செவல்பட்டியில் உள்ள தாய் சாந்தியின் (55) வீட்டிற்கு சென்றுவிட்டார். புதுமாப்பிள்ளை சிவாவுடன் சேர்ந்து வாழ விருப்பமில்லை என்று கூறி விவாகரத்து கேட்டு வழக்கு தொடர்ந்து உள்ளதாகவும் கூறப்படுகிறது. இந்தநிலையில் நேற்று அதிகாலையில் செவல்பட்டியில் மாமியார் வீட்டுக்கு சிவா சென்றார். மனைவியை சமாதானப்படுத்தி அழைத்து செல்ல முயன்றதாக கூறப்படுகிறது.மேலும் வாசகதேவியிடம் விவாகரத்து வழக்கை திரும்ப பெற்று மீண்டும் தன்னுடன் வாழ வருமாறுஅழைத்தார்.அதற்குஅவர்மறுத்துவாக்குவாதம் செய்ததாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரம் அடைந்த சிவா, மனைவியை வலுக்கட்டாயமாக வீட்டை விட்டு இழுத்துச் செல்ல முயன்றதாகவும் கூறப்படுகிறது. இதை மாமியார் சாந்தி, வாசகதேவியின் சகோதரர் சாமிமுருகன் (33) ஆகியோர் தடுத்துள்ளனர்.இதில் ஆத்திரம் அடைந்த சிவா, தான் மறைத்து வைத்திருந்த கத்தியால் மாமியார், மைத்துனரை சரமாரியாக குத்தி உள்ளார். இதில் ரத்த வெள்ளத்தில் சாந்தி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தார். சாமி முருகன் பலத்த காயம் அடைந்தார்.இதற்கிடையே இவர்களது அலறல் கேட்டு அக்கம்பக்கத்தினர் ஓடிவந்தனர். சாமி முருகன்மீட்கப்பட்டுவிருதுநகர்அரசுமருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டார். இதுகுறித்து தகவல் அறிந்த சூலக்கரை போலீசார், சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை நடத்தினர் .கொலை செய்துவிட்டு செவல்பட்டி பகுதியில் தலைமறைவாக இருந்த சிவாவை கைது செய்த போலீசார், அவரிடம் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகிறார்கள். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# பிளஸ்2 மாணவியை கர்ப்பமாக்கிய சித்தப்பா.. குண்டர் சட்டத்தில் கைது செய்த போலீசார்

தொண்டி, ஆக. 31

ராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை தாலுகாவில் உள்ள ஒரு கிராமத்தை சேர்ந்த 17 வயது மாணவி, தனது பாட்டி வீட்டில் வசித்து வந்தார். இவர் தேவகோட்டையில் உள்ள ஒரு பள்ளியில் பிளஸ்2 படித்து வந்தார். மாணவி வசித்து வந்த வீட்டில் அவரது சித்தி குடும்பத்தினரும் வசித்து வந்தனர்.3 மாத கர்ப்பம்

இந்தநிலையில் சம்பவத்தன்று அந்த மாணவியை அவருடைய சித்தப்பா மகேந்திரன் (வயது 39) பாலியல் பலாத்காரம் செய்துள்ளார். இதனால் மாணவியின் உடல் நலம் பாதிக்கப்பட்டதால் தேவகோட்டையில் உள்ள தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்து சென்றனர். அங்கு டாக்டர்கள் பரிசோதனை செய்து பார்த்தபோது மாணவி, 3 மாத கர்ப்பமாக இருந்தது தெரியவந்தது.குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது

இதுகுறித்ததகவலின்பேரில்ராமநாதபுரம்குழந்தைகள் நலஅலுவலர்கள்உரியவிசாரணைநடத்திதிருவாடானை அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி மகேந்திரனை கைது செய்தனர்.

இந்த நிலையில் ராமநாதபுரம் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சந்தீஸ், இதுகுறித்து விசாரித்தார். மாணவியை கர்ப்பமாக்கிய மகேந்திரனை குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்ய மாவட்ட கலெக்டருக்கு பரிந்துரை செய்தார். இதைதொடர்ந்து அதற்கான உத்தரவை கலெக்டர் சிவகுரு பிரபாகரன் பிறப்பித்தார். இதையடுத்து மகேந்திரன், குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறையில் அடைக்கப்பட்டார்.

# தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகளில் வெங்காயம் விற்பனை



சென்னை, ஆக. 31

சமையலுக்கு பிரதானமாக பயன்படுத்தப்படும் வெங்காயத்தின் விலை சமீபகாலமாக விலை உயர்ந்து காணப்படுகிறது. கடந்த மாதம் இறுதியில் கிலோ ரூ.30க்கு விற்பனை செய்யப்பட்ட பெரிய வெங்காயம் தற்போது கிலோவுக்கு ரூ.30 வரை அதிகரித்து ரூ.60 வரை விற்பனையாகிறது. சின்ன வெங்காயத்தின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. கடந்த மாதம் ரூ.40 முதல் ரூ.50 வரை விற்பனையான சின்ன வெங்காயம் தற்போது கிலோவுக்கு ரூ.20 வரை உயர்ந்து ரூ.70 வரை விற்பனை ஆகிறது. வெளிச்சந்தையில் முக்கிய காய்கறிகள் விலை உயரும்போது, அதை கட்டுப்படுத்த ரேஷன்கடைகளில் குறைந்தவிலைக்குவிற்கப்படுகின்றன.அந்தவகையில், ரேஷன்கடைகளில் குறைந்த விலைக்கு வெங்காயம் விற்க, கூட்டுறவு துறை முடிவு செய்துள்ளது.இதுகுறித்து, கூட்டுறவுமற்றும்உணவுதுறைஅதிகாரி கூறியதாவது: பொதுமக்களுக்கு வெங்காயத்தை குறைந்த விலைக்கு விற்க, மத்திய அரசு அறிவுறுத்தி உள்ளது. இதையடுத்து, 'நாபெட்' எனப்படும் இந்திய தேசிய வேளாண் கூட்டுறவு சந்தைப்படுத்துதல் கூட்டமைப்பிடம், முதல்கட்டமாக, 70,000 கிலோ வெங்காயம் வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. மத்திய அரசிடமிருந்து கிடைத்ததும், தமிழகம் முழுவதும் ரேஷன் கடைகளில் இந்த வெங்காயம் விற்கப்பட உள்ளது. ஒரு கிலோ, ரூ.30 முதல் ரூ.40க்குள் விற்பனை செய்யப்படும். என்று கூறினார்.

# தீவிரவாதிகள் தண்டிக்கப்பட்டால் முஸ்தபாவிற்கு கண்ணீர் வருவது ஏன்? நயினார் நாகேந்திரன் கேள்வி



சென்னை, ஆக. 31

பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் தளப்பதிவில் கூறப்பட்டிருப்பதாவது:தவெக சட்டமன்ற உறுப்பினர் முஸ்தபா அண்மையில் 'அமரன்' திரைப்படம் குறித்து வெளியிட்டுள்ள கருத்துக்கள் அதிர்ச்சியையும், கடும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளன. பாரதத் தாயின் மண்ணைக் காக்கத் தன் இன்னுயிரைத் தியாகம் செய்த மேஜர் முகுந்த் வரதராஜனின் வீர வரலாற்றைப் போற்றும் 'அமரன்' திரைப்படத்தை, ஏதோ ஒரு சமூகத்திற்கு எதிரானது போலச் சித்தரிக்க முயலும் முஸ்தபாவின் வஞ்சக அரசியல் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.பாகிஸ்தான் தீவிரவாதிகளைப்பற்றிய உண்மைக்கதையைப்படமாக எடுத்தால், அது எப்படி இஸ்லாமியர்களை இழிவுபடுத்துவதாக அமையும்?. ஒரு பயங்கரவாதி தண்டிக்கப்படுவதை முஸ்தபா ஏன் சகித்துக்கொள்ள மறுக்கிறார்?. பாகிஸ்தான் தீவிரவாதிகள் சுட்டுக்கொல்லப்படுவதைக் கண்டு ஒரு இந்தியக் குடிமகனுக்கு மகிழ்ச்சிதான் ஏற்பட வேண்டுமே தவிர, முஸ்தபாவைப் போலக்கண்ணீர்வரக்கூடாது. உங்களது அனுதாபம் இந்திய ராணுவத்திற்கா அல்லது எல்லையைத் தாண்டி வரும் பயங்கரவாதிகளுக்கா?. மேலும், முதல்அமைச்சர் விஜய் நடிப்பில் உருவான 'துப்பாக்கி' திரைப்படத்திலும் தீவிரவாதிகள் தொடர்பான காட்சிகளை நீக்க வைத்ததாகத் தம்பட்டம் அடித்துக்கொள்கிறார் முஸ்தபா. திரையில் தீவிரவாதி தண்டிக்கப்படுவதை ஒரு சமூகத்திற்கு எதிரானதாகக் காட்டி, தமிழகத்தின் அமைதியைச் சீர்குலைக்கத் துடிக்கும் முஸ்தபாவின் எண்ணம் ஒருபோதும் ஈடேறாது.முஸ்தபாபோன்றவர்களின் இத்தகைய நச்சுப் பேச்சுக்களை முதல்அமைச்சர் விஜய் உடனடியாகக் கண்டிக்க வேண்டும். இல்லையெனில், இதுதான் தவெகவின் அதிகாரப்பூர்வ நிலைப்பாடு என்பதாக தமிழக மக்கள் புரிந்துகொள்வார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பிரபல ரவுடி கொலையில் கணவன்-மனைவி கைது: விசாரணையில் திடுக்கிடும் தகவல்



கூடங்குளம், ஆக. 31

கூடங்குளம்அருகேபிரபலரவுடி கொலைவழக்கில் கணவன்மனைவி கைது செய்யப்பட்டனர்.குமரி மாவட்டம் தாமரைக்குளத்தைச் சேர்ந்தவர் ராமகிருஷ்ணன் மகன் செல்வம் (வயது 46). பிரபல ரவுடியானஇவர்மீதுகுமரி,தூத்துக்குடிதாளமுத்துநகர் உள்ளிட்ட போலீஸ் நிலையங்களில் கொலை உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் நிலுவையில் உள்ளதாககூறப்படுகிறது.செல்வத்துக்குசொந்தமான தோட்டம், நெல்லை மாவட்டம் கூடங்குளம் அருகே சங்கனேரி கிராமத்தில் உள்ளது.

இவர் சம்பவத்தன்று தனது தோட்டத்துக்கு சென்றபோது, மர்மநபர்களால் வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.பரபரப்பை ஏற்படுத்திய இந்த சம்பவம் குறித்து கூடங்குளம் போலீசார் வழக்குப்பதிவு செய்து மர்ம நபர்கள், கொலைக்கான காரணம் குறித்து தீவிர விசாரணை மேற்கொண்டனர். மேலும் இன்ஸ்பெக்டர் நவீன் உத்தரவின் பேரில், சப் இன்ஸ்பெக்டர் வினோத் குமார் தலைமையில் தனிப்படை அமைக்கப்பட்டது. அவர்கள் குற்றவாளிகள் குறித்து விசாரணை மேற்கொண்டனர். விசாரணையில் செல்வத்தின் கூட்டாளிகளான பொட்டல்குளத்தை சேர்ந்த சந்துரு (26), அவரது மனைவி கவுரி ஆகியோர் இந்த கொலை சம்பவத்தில் ஈடுபட்டது தெரியவந்தது.இதையடுத்து போலீசார் 2 பேரையும் நேற்று முன்தினம் இரவில் பிடித்து விசாரணை மேற்கொண்டனர்.

அதில் பல்வேறு திடுக்கிடும் தகவல்கள் வெளியாகின. அதாவது, செல்வம், சந்துரு சேர்ந்து குளத்தைகுத்தகைக்குஎடுத்துஅதில்தாமரைபூக்களை வளர்த்து விற்பனை செய்தனர்.சமீபத்தில் ஒரு குளத்தை குத்தகைக்கு எடுத்த விவகாரத்தில் பணம் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அவர்களுக்கு இடையே தகராறு ஏற்பட்டது. இதனால் ஏற்பட்ட முன்விரோதம் காரணமாக செல்வத்தை 2 பேரும் சேர்ந்து கொலை செய்தது போலீஸ் விசாரணையில் தெரியவந்தது.இதையடுத்து போலீசார் வழக்குப்பதிந்து சந்துரு, கவுரி ஆகியோைர அதிரடியாக கைது செய்தனர்.

# பருத்தி நூல் ஏற்றுமதியை முறைப்படுத்த வேண்டும்: மத்திய அரசுக்கு ஏ.இ.பி.சி. வலியுறுத்தல்



திருப்பூர், ஆக. 31

பருத்தி வினியோகத்தில் ஏற்பட்டுள்ள கட்டுப்பாடுகள், ஜின்னிங் ஆலைகளிடம் குறைந்துள்ள பருத்தி இருப்பு மற்றும் சந்தைக்கு வரும் பருத்தியின் அளவு குறைந்துள்ளதால் நூற்பாலைகளுக்கு பருத்தி கிடைப்பதில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.கடந்த ஜனவரி மாதத்தில் 1 கிலோ பருத்தி நூல் சுமார் ரூ.250 ஆக இருந்த நிலையில், தற்போது சுமார் ரூ.400 வரை உயர்ந்துள்ளது. அதாவது 60 சதவீதம் விலை அதிகரித்துள்ளதால், ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி துறையில் கடுமையான செலவினத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனுடன் மூலப்பொருட்கள் மற்றும் எரிபொருள் விலையேற்றமும் உற்பத்தி செலவை மேலும் அதிகரித்துள்ளது.மேலும்வங்கதேசம்மற்றும்மியான்மர் போன்ற ஆயத்த ஆடை உற்பத்தி செய்யும் நாடுகளுக்கு இந்திய பருத்தி மற்றும் பருத்தி நூல் ஏற்றுமதி அதிகரித்துள்ளது. இது உள்நாட்டு மூலப்பொருள் விலையில் கூடுதல் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்து மற்றும் நியூசிலாந்து போன்ற புதிய வரியில்லா வர்த்தக ஒப்பந்தம் அமைக்கப்பட்ட நாடுகளின் சந்தைகளில் இந்தியாவுக்கு ஏற்றுமதி வாய்ப்புகள் அதிகரித்து வரும் நிலையில், இந்த நூல் விலை உயர்வு கவலையை ஏற்படுத்தியுள்ளது.ஒரு கிலோ பருத்தி ரூ.275, நூலாக மாற்றப்பட்டால் ரூ.325 மதிப்பை பெறுகிறது.

ஆனால், அதே பருத்தி மதிப்பு கூட்டப்பட்ட ஆடையாக மாற்றப்பட்டு ஏற்றுமதி செய்யப்படும் போது, ஒரு கிலோவுக்கு சுமார் ரூ.800 முதல் ரூ.1,200 வரை மதிப்பு கிடைக்கக்கூடும். மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியை ஊக்குவிப்பது நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் வேலைவாய்ப்பு உருவாக்கத்திற்கு மிகவும் முக்கியமானதாக உள்ளது.இந்தநிலையில் ஆயத்த ஆடை ஏற்றுமதி மேம்பாட்டு கழகத் தின் (ஏ.இ.பி.சி.) தலைவர் சக்திவேல், மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை மந்திரி பியூஷ்கோயலுக்குஅனுப்பியுள்ள கடிதத்தில், '20 எஸ் கவுண்ட் மற்றும் அதற்கு மேற்பட்ட பருத்தி நூல் ஏற்றுமதியை உரிய முறையில் முறைப்படுத்தி, உள்நாட்டு ஆயத்த ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி நிறுவனங்களுக்கு தேவையான நூல் உரிய விலையில் கிடைக்க மத்திய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.மத்திய அரசின் விரைவான தலையீடு ஆயத்த ஆடை ஏற்றுமதித் துறைக்கு நிவாரணம் அளிப்பதுடன், இந்தியாவின் மதிப்பு கூட் டப்பட்ட ஆடை ஏற்றுமதியை உலகளவில் மேலும் விரிவுபடுத்தவும், சர்வதேச போட்டித்திறனை வலுப்படுத்தவும் உதவும்' என்று கூறியுள்ளார்.

# தர்மபுரி அருகே கொடூரம்: தனது தாயையும், மகளையும் ஒரே நேரத்தில் வெட்டிக்கொன்ற சமையல் மாஸ்டர்



பாப்பிரெட்டிப்பட்டி, ஆக. 31

பாப்பிரெட்டிப்பட்டி அருகே மதுபோதையில் தாய், மகளை வெட்டிக் கொன்ற சமையல் மாஸ்டரை போலீசார் கைது செய்தனர்.தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப்பட்டி அருகே அதிகாரப்பட்டி அம்மன் நகரை சேர்ந்தவர் சுரேஷ் (வயது 45). ஓட்டல் சமையல் மாஸ்டர். இவருடைய மனைவி ஷாலினி. இவர்களது மகள்சின்மயி(19).இவர்தனியார்கல்லூரியில்டிப்ளமோ நர்சிங் முதலாம் ஆண்டு படித்து வந்தார். கணவன் மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்து வாழ்ந்து வருகிறார்கள்.இதனால் சின்மயி, பாட்டி உமாராணி (60) உடன் வசித்து வந்தார். இன்னொரு வீட்டில் சுரேஷ் வசித்து வருகிறார். சேலத்தில் தனியார் ஓட்டலில் தங்கி கூலி வேலை செய்து வரும் ஷாலினி அவ்வப்போது ஊருக்கு வந்து மகள் சின்மயியை பார்த்து செல்வது வழக்கம். இதனிடையே நேற்று முன்தினம் இரவு சின்மயி சுரேசுக்கு சாப்பாடு கொடுக்க சென்றார். அப்போது சின்மயிடம், யாரிடம் நீ போன் பேசுகிறாய் என்று கேட்டுள்ளார். நான் யாரிடம் வேண்டுமானாலும் பேசுவேன்நீ சரியாக இருந்திருந்தால் நான்தாயை பிரிந்து தனியாக இருப்பேனா?, நீ சரியில்லை எனக்கூறி தந்தையை சின்மயி திட்டியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த சுரேஷ் மது போதையில் வீட்டில் இருந்த அரிவாளால் மகளை சரமாரியாக வெட்டியதாக கூறப்படுகிறது.இதனை தடுக்க வந்த உமாராணியையும் அவர் தாக்கி அரிவாளால் கழுத்து, தலை உள்ளிட்ட இடங்களில்வெட்டியுள்ளார்.இதில்படுகாயம்அடைந்த உமாராணி ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தார்.இதையடுத்து அக்கம் பக்கத்தினர் சின்மயியை மீட்டு பாப்பிரெட்டிப்பட்டி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு முதலுதவி சிகிச்சை அளிக்கப்பட்டு மேல் சிகிச்சைக்காக தர்மபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட் டது.இதுகுறித்து ஏ.பள்ளிப்பட்டி போலீசுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. அதன் பேரில் போலீசார் விரைந்து சென்று கொலை செய்யப்பட்ட உமாராணியின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக தர்மபுரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். தொடர்ந்து சுரேசை போலீசார் கைது செய்தனர்.

இந்த நிலையில் நேற்று மாலை தர்மபுரி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த சின்மயி சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இந்த இரட்டை கொலை குறித்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு அருண் கபிலன், அரூர்துணைபோலீஸ்சூப்பிரண்டுசதீஷ்குமார், ஏ.பள்ளிப்பட்டி இன்ஸ்பெக்டர் வான்மதி ஆகியோர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். தொடர்ந்து போலீசார் வழக்குப்பதிந்து விசாரித்து வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# சென்னை: சுடுகாட்டில் ரவுடி வெட்டி கொலை மர்ம நபர்களுக்கு போலீசார் வலைவீச்சு



சென்னை, ஆக. 31

சுடுகாட்டில் ரவுடியை வெட்டி கொலை செய்த மர்ம நபர்களை போலீசார் வலைவீசி தேடி வருகின்றனர்.

சென்னை கேளம்பாக்கம் பகுதியில் உள்ள சுடுகாட்டில் ஒருவரின் சடலம் ரத்த வெள்ளத்தில் கிடந்தது. இதனை அந்த வழியே சென்றவர் பார்த்து போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர். தகவலறிந்த கேளம்பாக்கம் போலீசார் சம்பவ இடத்திற்கு சென்று இறந்து கிடந்த நபரின் வெட்டு காயங்களை பார்த்ததும் வெட்டி கொலை செய்யப்பட்டது தெரியவந்தது. மேலும், கொலை செய்யப்பட்டவர் யார் என்பது குறித்து விசாரணை செய்தனர். அப்போது அவர் ரவுடி சாஹூல் ஹமீது (வயது 29) என்பது உறுதி செய்யப்பட்டது. பின்னர் அவரது உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக செங்கல்பட்டு அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேலும் கொலை வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். கொலை செய்யப்பட்ட நபர் மீது பல்வேறு குற்ற வழக்குகள் இருப்பதாகவும் தெரிவித்தனர். இந்த கொலை முன்விரோதம் காரணமாக நடந்ததா என்பதை போலீசார் பல்வேறு கோணத்தில் விசாரணை செய்து வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

தினகனி

NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253

31.08.2026

# பெரியார், அம்பேத்கர், நேரு பெயர்கள் நீக்கம்: காரணத்தை தமிழக அரசு விளக்க வேண்டும் – இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

சென்னை, ஆக. 31

தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், பண்டிட் ஜவஹர்லால் நேரு பெயர்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பில் நீக்கப்பட்டதன் காரணத்தை தமிழ்நாடு அரசு விளக்க வேண்டும். இதுகுறித்து, இந்தியகம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் மு. வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது: பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பேட்டில், இடஒதுக்கீடு மற்றும் சமூகநீதி வரலாற்றைக் கூறும் பகுதியில் இடம் பெற்றிருந்த தந்தை பெரியார், அண்ணல் அம்பேத்கர், மற்றும் பண்டிட் ஜவஹர்லால் நேரு ஆகியோரின் பெயர்கள் நீக்கப்பட்டிருந்தன. இது கடும் கண்டனத்திற்கு உள்ளானது. கண்டனக் கணைகளின் தாக்கத்திற்குப் பிறகு, தற்பொழுது அத்தலைவர்களின் பெயர்கள் குறிப்பேட்டில் சேர்க்கப்படும் என அமைச்சர் வி.சம்பத்குமார் கூறியுள்ளார். எனினும் , இதற்குக் காரணமானவர்கள் யார் என்ற கேள்விக்கு விடை அளிக்கப்படவில்லை. மதச்சார்பின்மை கொள்கைதந்தை பெரியார், டாக்டர் அம்பேத்கர் , நவீன இந்தியாவின் சிற்பி ஜவஹர்லால் நேரு ஆகியோர் மதச்சார்பின்மை கொள்கையில் உறுதியாக நின்றவர்கள் ஆவர். பிற்போக்குத் தனங்களை, இந்துத்துவ மதவெறி அரசியலை ,வகுப்புவாதத்தை வாழ்நாள் முழுவதும் எதிர்த்துப் போராடியவர்கள் ஆவர். நவீன இந்தியாவை உருவாக்குவதில் மகத்தான பங்களிப்பை தத்தம் வழிகளில் செலுத்தியவர்கள் ஆவர். அவர்களை சமூக நீதிக்காகப் போராடியவர்கள் என்று மட்டுமே பார்த்து விட முடியாது. அதற்கும் மேலாக உண்மையான சுதந்திரம் ,சமத்துவம் ,சகோதரத்துவம் என்ற உன்னதக் கோட்பாட்டை இந்திய மண்ணில் நடைமுறைப்படுத்த வேண்டும் என அயராது பாடுபட்டவர்கள் ஆவர் .அப்படிப்பட்ட மகத்தானத் தலைவர்களின் பெயர்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை கொள்கை விளக்கக் குறிப்பேட்டிலிருந்து நீக்கப்பட்டது என்பதை, தற்செயலானதாக, சாதாரண ஒரு தவறாக பார்க்க முடியாது. அதை ஒரு திட்டமிட்டச் செயலாகவே கருதவேண்டியுள்ளது. இந்த மாபெரும் தலைவர்களின் பெயர்கள் இந்துத்துவா சக்திகளுக்கு, மத அடிப்படை வாதிகளுக்கு ,பிற்போக்குச் சக்திகளுக்கு எப்பொழுதுமே எட்டிக்காய் போன்று கசப்பதாகும். அவர்கள் மீது வெறுப்பு எனும் நெருப்பை இச்சக்திகள் தொடர்ந்து அள்ளி வீசுகின்றன. அத்தலைவர்களைஇழிவுபடுத்திவருகின்றன. கடுமையான நடவடிக்கைஎனவே , இந்நிலையில், இத்தலைவர்கள் பெயர்கள் ஏன் நீக்கப்பட்டன? இந்த நீக்கத்துக்குப் பின்னால் உள்ள சக்திகள் எவை ? என்பவை குறித்து முழுமையான ,நேர்மையான விசாரணையை தமிழ்நாடு அரசு நடத்த வேண்டும். இத்தலைவர்களின் பெயர் நீக்கத்திற்குக் காரணமானவர்களை கண்டறிந்து அவர்கள் மீது கடுமையான நடவடிக்கைகளை எடுத்திட வேண்டுமென ,இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு , தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஆன்லைன் மோசடியால் பாதிக்கப்பட்ட மக்கள் 3வது நாளாக புகார்: திணறும் போலீசார்



மேலூர், ஆக. 31

மேலூர் பகுதியில் ஆன்லைன் செயலி மூலம் பல கோடி ரூபாய் மோசடி செய்யப்பட்ட சம்பவத்தில் ஆயிரக்கணக்கான பெண்கள் புகார் அளிக்க குவிந்தனர். ஆன்லைன் செயலியில் மோசடி மதுரை மாவட்டம் மேலூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில மாதங்களாக பொதுமக்களிடம் பலர், எப்.கியூ..எல். நிறுவனம் என்ற நிதி நிறுவனம் சார்பில் செல்போன் செயலிகள் மூலம் பணம் இரட்டிப்பு செய்து தருவதாக நேரில் வந்து ஆசைவார்த்தை கூறியுள்ளனர். குறிப்பாக பெண்களிடம் பேசினர். இதற்காக ஏஜெண்டுகள் செயல்பட்டனர். இந்த செயலிகளை நம்பி ஆயிரக்கணக்கானோர் கடன் வாங்கி முதலீடு செய்தனர். ஆனால் குறிப்பிட்ட நாட்களுக்கு பிறகு பணத்தை இரட்டிப்பு செய்து தரவில்லை என கூறப்படுகிறது. இதனால் பாதிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மக்கள் நேற்று முன்தினம் மேலூரில் மதுரை சென்னை நான்கு வழிச்சாலையில் 4 மணி நேரம் மறியல் போராட்டம் நடத்தினர். மற்றொரு இடத்திலும் பெருமளவில் திரண்டு போராட்டம் நடத்தினர். நீண்ட நேர பேச்சுவார்த்தைக்கு பின் பொதுமக்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். இதையடுத்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு தேவநாதன் நேரடி மேற்பார்வையில் நேற்று 3 இடங்களில் பொதுமக்கள் புகார் அளிக்க சிறப்பு முகாம்கள் நடைபெற்றன. மேலூர்அரசுஆண்கள்மேல்நிலைப்பள்ளி, செட்டியார்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி, வெள்ளலூர் நாடு கோட்டநத்தம்பட்டி ஆகிய பகுதிகளில் முகாம் நடந்தது. இதில் மேலூரில் நடந்த முகாமில் 18,500க்கும் மேற்பட்ட மனுக்களும், செட்டியார்பட்டி அரசு மேல்நிலைப்பள்ளி முகாமில் 1,450க்கும் மேற்பட்ட மனுக்களும், வெள்ளலூர்நாடு கோட்டனத்தம்பட்டி தனியார்திருமணமண்டபமுகாமில்3,077க்கும்மேற்பட்ட மனுக்களும் பொதுமக்கள் அளித்தனர். குறிப்பாக ஆயிரக்கணக்கான பெண்கள் வரிசையாக நின்று புகார் அளித்தனர். நேற்று ஒரே நாளில் இந்த முகாம்களில் 25 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் புகார் மனுக்கள் அளித்துள்ளனர். இவ்வாறு பெறப்பட்ட புகார்மனுக்களை கட்டுக்கட்டாக மலை போல போலீசார் அடுக்கி வைத்திருந்தனர். நநிலையில்மதுரை, மேலூரைசுற்றியுள்ள பகுதிகளில் ஆன்லைன் மோசடியால் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்கள் 3வது நாளாக இன்றும் புகார் கொடுக்க கூட்டம் கூட்டமாக வருகை தந்த வண்ணம் உள்ளனர். இதனால் போலீசார் திணறி வருகின்றனர். இன்று மட்டும் இதுவரை 1,200 பேர் தங்களது புகார் மனுக்களை அளித்துள்ள நிலையில், தலா ரூ.5 லட்சம் வரை பணம் கொடுத்துள்ளதாக புலம்பி வருகின்றனர்.

# இன்றைய ராசி பலன்கள் (31.08.2026)

**மேஷம்:** வேலை மற்றும் பண விஷயங்களில் சற்று கவனம் தேவை. அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். குடும்பத்தில் சிறிய கருத்து வேறுபாடுகள் வரலாம்.

**ரிஷபம்:** தொழிலில் அழுத்தம் இருந்தாலும் முன்னேற்றத்திற்கான வாய்ப்பு உள்ளது. பண விஷயங்களில் திட்டமிட்டு செயல்படுவது நல்லது.

**மிதுனம்:** புதிய வாய்ப்புகள் கிடைக்கலாம். பேச்சுத்திறன் மூலம் காரியங்களை சாதிக்க முடியும். வேலை தொடர்பாக வெற்றி கிடைக்கும் நாள்.

**கடகம்:** மனநிம்மதி அதிகரிக்கும். எதிர்பார்த்த உதவி கிடைக்கலாம். வேலை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையில் நல்ல முன்னேற்றம் ஏற்படும்.

**சிம்மம்:** முயற்சிகளில் வெற்றி கிடைக்கும் வாய்ப்பு அதிகம். உறவுகளில் பொறுமையாக இருப்பது நல்லது.

**கன்னி:** புதிய தொடர்புகள் மற்றும் வாய்ப்புகள் கிடைக்கலாம். வியாபாரத்தில் லாபம் கிடைக்கும் சூழல் உள்ளது.

**துலாம்:** பணவரவு இருந்தாலும் தேவையற்ற செலவுகளைத் தவிர்க்கவும். முக்கிய ஒப்பந்தங்கள் அல்லது சட்ட விஷயங்களில் ஆவணங்களை கவனமாகப் பார்க்கவும்.

**விருச்சிகம்:** திட்டமிட்ட காரியங்களில் தாமதம் ஏற்படலாம். பண விஷயங்களில் ரிஸ்க் எடுப்பதைத் தவிர்த்து பொறுமையாக செயல்படவும்.

**தனுசு:** சாதகமான நாள். புதிய வாய்ப்புகள் கிடைக்கலாம்; மனதில் இருந்த ஒரு காரியம் நிறைவேறும் வாய்ப்பு உள்ளது. உடல்நலத்திலும் முன்னேற்றம் காணலாம்.

**மகரம்:** பணம்மற்றும்பேச்சுவிஷயங்களில் கூடுதல் கவனம் தேவை. முக்கிய முடிவுகளை அவசரமாக எடுக்க வேண்டாம்.

**கும்பம்:** உணர்ச்சிவசப்பட்டு முடிவெடுப்பதைத் தவிர்க்கவும். உறவுகள் மற்றும் மனநிலையில் மாற்றங்கள் ஏற்படலாம்.

**மீனம்:** மன அமைதிக்கு முக்கியத்துவம் கொடுக்கவும். பணப் பரிவர்த்தனைகளில் கவனம் தேவை; குடும்ப ஆதரவு கிடைக்கும்.

# மு.க.ஸ்டாலினுக்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பை மீண்டும் வழங்க வேண்டும்: திருமாவளவன்

திருச்சி, ஆக. 31

திருச்சியில்விசிகதலைவர்திருமாவளவன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:சட்டசபைகொள்கைவிளக்கக் குறிப்பேடுகளில் வழக்கமாக இடம்பெறும் புரட்சியாளர் அம்பேத்கர், தந்தை பெரியார் மற்றும் பண்டித ஜவஹர்லால் நேரு போன்ற மாபெரும் தலைவர்களின் பெயர்கள் விடுபட்டுள்ளது இது உள்ளக்கத்தோடு நடந்துள்ளதா என கேள்வி எழுகிறது. இதற்குப் பொறுப்புள்ள அதிகாரிகளும், அமைச்சர்களும் உரிய விளக்கத்தை அளிப்பார்கள் என்று நம்புகிறேன். இனி வரும் காலங்களில் அது போன்ற பிழைகள் நடைபெறாத வகையில் பார்த்து கொள்ள வேண்டும். முன்னாள் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு இசட் பிரிவு பாதுகாப்பு விலக்கிகொள்ளப்பட்டதுஏற்புடையதல்ல; இதுவரை வழங்கி வந்த பாதுகாப்பை அவருக்கு வழங்க வேண்டும். இதற்கான ஏற்பாடுகளையும்தமிழகஅரசுமேற்கொள்ள வேண்டும். தவெக தலைமையிலான இந்த ஐந்தாண்டு கால ஆட்சியில் தலித் மக்களுக்கு இன்னும் பல சட்டப்பூர்வ உரிமைகள் நிறைவேற்றப்பட வேண்டி உள்ளன. குறிப்பாக, வன்கொ டுமை தடுப்புச் சட்டம் இந்தியா முழுவதும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட் டால் சட்டம் ஒழுங்கு பிரச்சினை ஏற்படும் என்ற அதிகாரிகளின் கருத்துக்களால் பல நல்ல திட்டங்கள் முடங்குகின்றன. ஆட்சி யாளர்கள் விரும்பினாலும் அதிகாரிகள் சில இடங்களில் முட்டுக்கட்டை போடுகின்ற னர். தற்போதைய அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தோழமைக் கட்சியாக, தலித் மக்களின் மேம்பாட்டிற்காக அரசு செய்ய வேண்டிய அவசியமான சட்டப்பூர்வ நடவடிக்கைகளை அவ்வப்போது சுட்டிக் காட்டியும், கோரிக்கைகளை வலியுறுத்தி யும் உரியதீர்வுகளைப்பெறவிசிகதொடர்ந்து குரல் கொடுக்கும். இவ்வாறு அவர் கூறி னார்.


# கரூர் மக்களின் குடிநீர் நெருக்கடிக்கு உடனடி தீர்வு வேண்டும் ஜோதிமணி எம்.பி. கோரிக்கை

சென்னை, ஆக. 31

உரிய அளவு நீரை அமராவதி அணையிலிருந்து கரூர் மாவட்டத்திற்கு உடனடியாக திறந்து விட வேண்டும் என காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது; கரூர் மாவட்ட மக்கள் இன்று மிகக் கடுமையான குடிநீர் நெருக்கடியைஎதிர்கொண்டுவருகின்றனர். இதுவரை கரூர் மாவட்ட மக்களின் குடிநீர் தேவைக்காக அமராவதி அணையிலிருந்து உரிய அளவில் ஒரு முறைகூட நீர் திறக்கப்படவில்லை. மழையின்றி விவசாயம் முற்றிலும் பாதிக்கப்பட்டு நிற்கும் நிலையில், குடிநீருக்கே மக்கள் தவிக்கும் சூழல் ஏற்பட்டுள்ளது. இந்த அவசர நிலையை கருத்தில் கொண்டு, நீர்வளத்துறையிடம் பலமுறை கோரிக்கை வைத்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாததால், விவசாயிகள் நீதிமன்றத்தை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. மதுரை உயர்நீதிமன்றம், கரூர் மக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு 29.08.2026 அன்று அமராவதி அணையிலிருந்து படிப்படியாக 10 நாட்களுக்கு நீர் திறக்க உத்தரவிட்டது. அதன்படி,

முதல் நாள் 3,000 கனஅடி இரண்டாம் நாள் 3,000 கனஅடி மூன்றாம் நாள் 2,000 கனஅடி நான்காம் நாள் 2,000 கனஅடி ஐந்தாம் நாள் 1,500 கனஅடி ஆறாம் நாள் 1,500 கனஅடி ஏழாம் நாள் 1,000 கனஅடி எட்டாம் நாள் 1,000 கனஅடி ஒன்பதாம் நாள் 750 கனஅடி பத்தாம் நாள் 750 கனஅடி என்ற முறையில் நீர் திறக்க உத்தரவிடப்பட்டுள்ளது. ஆனால், தமிழ்நாடு அரசு தற்போது வெளியிட்டுள்ள அரசாணையில், தினமும் 1,000 கனஅடி வீதம் மட்டுமே நீர் திறப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. நீதிமன்றம் முதல் இரண்டு நாட்களிலேயே 3,000 கனஅடி வீதம்நீர்திறக்கஉத்தரவிட்டுள்ளநிலையில், அரசு தற்போது 1,000 கனஅடி என்ற அளவில் நீர் திறப்பது கரூர் மக்களின் அவசர குடிநீர் தேவையை நிறைவேற்றாது.

# ஆஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் தொடரில் இருந்து ரபாடா விலகல்



ஆஸ்திரேலியகிரிக்கெட்அணிஅடுத்தமாதம்தென்ஆப்பிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள், 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாட உள்ளது. இரு அணிகளுக்கும் இடையேயான முதல் ஒருநாள் போட்டி அடுத்த மாதம் 24ம் தேதி நடைபெற உள்ளது. இந்த ஒருநாள் தொடரில் தென் ஆப்பிரிக்க வேகப்பந்து வீச்சாளர் ககிசோ ரபாடா இடம்பெற்றிருந்தார். ஆனால், கையில் ஏற்பட்ட காயம் காரணமாக ஒருநாள் தொடரில் இருந்து ரபாடா விலகியுள்ளார். காயத்தில் இருந்து குணமடைய 6 வார காலம் ஓய்வு தேவை என மருத்துவக்குழுவினர் தெரிவித்துள்ளதால் ஒருநாள் தொடரில் இருந்து ரபாடா விலகியுள்ளார். மேலும், டெஸ்ட் தொடரில் அவர் விளையாடுவதிலும் சந்தேகம் எழுந்துள்ளது.

# 2வது டெஸ்ட்: பாகிஸ்தானுக்கு 389 ரன்கள் இலக்கு நிர்ணயித்த இங்கிலாந்து



இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இதில் முதல் டெஸ்ட்டில் இங்கிலாந்து இன்னிங்ஸ் மற்றும் 103 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதையடுத்து, இரு அணிகளுக்கும் இடையேயான 2வது டெஸ்ட் லண்டனில் கடந்த 27ம் தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது. இதில் டாஸ் வென்ற பாகிஸ்தான் முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 290 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. இதையடுத்து முதல் இன்னிங்சை தொடங்கிய பாகிஸ்தான் 110 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. சிறப்பாக பந்து வீசிய இங்கிலாந்து வீரர் ராபின்சன் அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதனை தொடர்ந்து 180 ரன்கள் முன்னிலையுடன் 2வது இன்னிங்சை தொடங்கிய இங்கிலாந்து 208 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. அந்த அணியின் லாரன்ஸ் அதிகபட்சமாக 54 ரன்கள் சேர்த்தார். சிறப்பாக பந்து வீசிய பாகிஸ்தான் வீரர் முகமது அப்பாஸ் அதிகபட்சமாக 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதன் மூலம் பாகிஸ்தான் வெற்றிபெற 389 ரன்களை இலக்காக இங்கிலாந்து நிர்ணயித்துள்ளது. இதையடுத்து, 4ம் நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் களமிறங்கி 2வது இன்னிங்சில் விளையாட உள்ளது. 389 ரன்கள் என்ற கடினமான இலக்கை நோக்கி பாகிஸ்தான் விளையாட உள்ள நிலையில் இப்போட்டியிலும் இங்கிலாந்தே வெற்றிபெற அதிக வாய்ப்பு உள்ளதாக ரசிகர்கள் கருதுகின்றனர்.

# பெண்கள் ஆசிய கோப்பை கிரிக்கெட்: ஐக்கிய அமீரகத்தை வீழ்த்தி இலங்கை வெற்றி



பெண்கள் ஆசிய கோப்பை டி20 கிரிக்கெட் தொடர்துபாயில்நடைபெற்றுவருகிறது. இத்தொடர் நேற்று முன் தினம் தொடங்கியது. இத்தொடரில் குரூப் ஏ பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், தாய்லாந்து, ஹாங்காங் அணிகள் இடம்பெற்றுள்ளன. குரூப் பி பிரிவில் இலங்கை, வங்காளதேசம், ஐக்கிய அரபு அமீரகம், இந்தோனேசியா என மொத்தம் 8 அணிகள் இடம்பெற்றுள்ளன. இத்தொடரில் நேற்று நடந்த 2வது லீக் ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரகம், இலங்கை மோதின. இதில் டாஸ் வென்ற இலங்கை முதலில் பந்து வீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து , முதலில் பேட்டிங் செய்த ஐக்கிய அரபு அமீரகம் 19.5 ஓவரில் 79 ரன்களுக்கு ஆல் அவுட் ஆனது. சிறப்பாக பந்து வீசிய இலங்கை வீராங்கனைகள் மைதிலி, சேதன விமுக்தி அதிகபட்சமாக தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இதையடுத்து, 80 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இலங்கை 7.5 ஓவரில் 1 விக்கெட் இழப்பிற்கு 80 ரன்கள் எடுத்தது. இதன் மூலம் ஐக்கிய அரபு அமீரகத்தை 9 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தி இலங்கை அபார வெற்றிபெற்றது. சிறப்பாக ஆடிய இலங்கை கேப்டன் சாமரி அத்தபத்து 48 ரன்கள் குவித்து இறுதிவரை ஆட்டமிழக்காமல் அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

# எம்.எஸ்.சுப்புலட்சுமி பயோபிக்கில் நடிகை ராஷ்மிகா மந்தனா





1916ம் ஆண்டு செப்டம்பர் 16ம் தேதி மதுரையில் பிறந்தவர் எம்.எஸ். சுப்புலட்சுமி. அவர் தனது 10வது வயதில் எச்.எம்.வி. நிறுவனத்திற்காக பாடி சாதனை படைத்தார். அதனைத்தொடர்ந்து சில படங்களிலும் நடித்தார். அவர் நடித்த முதல் படம் சேவாசதன். அதன் பின்னர் 4 படங்களில் எம்.எஸ். நடித்தார். அதில் அதிகம் பிரபலமடைந்த படம் மீரா. கர்நாடக இசையின் ராணியாக கோலோச்சி வந்த எம்.எஸ். பெறாத பட்டங்களோ, பரிசுகளோ கிடையாது எனக் கூறும் வகையில் அத்தனை உயர் பரிசுகளையும், பட்டங்களையும் பெற்றார். 1954ல் பத்மபூஷன் விருதைப் பெற்றார். மியூசிக் அகாடமி வழங்கும் சங்கீத கலாநிதி பட்டத்தை 1968ல் பெற்றார். இந்த விருதைப் பெற்றமுதல் பெண்மணி எம்.எஸ்.தான். 1998ல் இந்தியாவின் உயரிய விருதான பாரதரத்னா விருதைப் பெற்றார். இவர் கடந்த 2004ம் ஆண்டு தனது 88வது வயதில் உயிரிழந்தார். இவரின் வாழ்க்கை வரலாறை சினிமா படமாக்க கீதா ஆர்ட்ஸ் நிறுவனம் முடிவு செய்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் படத்தை தெலுங்கில் ஜெர்ஸி, கிங்டம் உள்ளிட்ட திரைப்படங்களை இயக்கிய கௌதம் தின்னூரி இயக்க இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. அல்லு அரவிந்த், பன்னிவாசு, ராக்லைன் வெங்கடேஷ் ஆகியோர் இணைந்து தயாரிக்கின்றனர். இதில் எம்.எஸ்.சுப்புலட்சுமி கதாபாத்திரத்தில் முன்னணி நடிகைகள் திரிஷா, நயன்தாரா மற்றும் ராஷ்மிகா மந்தனா ஆகியோரிடம் பேச்சு வார்த்தை நடத்தப்பட்டது. ஆனால் எதுவும் கைக்கூடாததால் சாய் பல்லவி இறுதிசெய்யப்பட்டதாக தகவல் வெளியானது. இதுவும் அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படாத நிலையில் அவருக்கு பதில் ருக்மிணி வசந்த் நடிக்கவுள்ளதாக கூறப்பட்டது. இந்த நிலையில் இறுதியாக ராஷ்மிகா மந்தனா கமிட்டாகியுள்ளதாகவும் இது குறித்து அறிவிப்பு எம்.எஸ்.சுப்புலட்சுமியின் பிறந்தநாளான செப்டம்பர் 16ஆம் தேதி வெளியாகவுள்ளதாக தெலுங்கு திரை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# காதலரை கரம் பிடித்த “பாரதி கண்ணம்மா” சீரியல் நடிகை வினுஷா தேவி




மாடலிங் துறையில் கவனம் செலுத்திய வினுஷா தேவி பல விளம்பர படங்களில் நடித்ததன் மூலம் திரைத்துறையின் கவனத்தைஈர்த்தார். அழகுப்போட்டிகள், போட்டோஷூட்கள் மற்றும் விளம்பரங்கள் மூலம் தனக்கென ஒரு அடையாளத்தை உருவாக்கிய அவர், பின்னர் சின்னத்திரைக்குள் நுழைந்தார். ஆரம்பத்தில் சிறிய வாய்ப்புகள் கிடைத்தாலும், அவற்றை சரியாக பயன்படுத்தி ரசிகர்களின் கவனத்தை பெற்றார். ‘பாரதி கண்ணம்மா’ தொடரிலிருந்து ரோஷினி ஹரிப்ரியன் விலகியபோது, அவருக்கு பதிலாக கண்ணம்மா கதாபாத்திரத்தில் வினுஷா தேவி நடித்து கவனத்தை ஈர்த்தார்.

விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான ‘பாரதி கண்ணம்மா’ தொடரில் நடித்ததன் மூலம் மக்களிடையே பிரபலமானவர் நடிகை வினுஷா தேவி. முதல் பாகத்தின் வெற்றியைத் தொடர்ந்து இரண்டாவது பாகத்திலும் வினுஷா நடித்திருந்தார். விஜய் தொலைக்காட்சியின் ‘பிக் பாஸ்’ நிகழ்ச்சியில் போட்டியாளராக பங்கேற்றுள்ளார். மீண்டும் சீரியல் தொடரில் நடித்துவருகிறார்.

திரையில் வெற்றிகரமான நாயகியாக வலம் வரும் வினுஷா தேவி, நீண்டநாள் காதலரான லிங்கேஸ்வரனை கடந்த சில மாதங்களுக்கு முன்பு ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தினார். கடந்த ஜூன் மாதம் இருவருக்கும் திருமண நிச்சயம் நடைபெற்றது. இதன் புகைப்படங்களை ரசிகர்களுடன் வினுஷா பகிர்ந்திருந்தார்.

இந்த நிலையில், பாரதி கண்ணம்மா நடிகை வினுஷா தேவிக்கு, லிங்கேஸ்வரன் என்பவருடன் இன்று திருமணம் நடைபெற்றது. உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் பிரமாண்டமாக இந்த நிகழ்வு நடைபெற்றது. இதில் சினிமா, சின்ன திரை பிரபலங்கள் பலரும் பங்கேற்றனர். சின்ன திரை பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் பலர் வினுஷா லிங்கேஸ்வரன் ஜோடிக்கு வாழ்த்து தெரிவித்து வருகின்றனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.